திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பப்பாளியைத் தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்தும் இலங்கை குளவிகள்!**

First Published : 19 Dec 2010 10:22:33 AM IST

தருமபுரி, டிச. 18: பப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த இலங்கை குளவிகளை வேளாண்துறை பயன்படுத்தி வருகிறது.

÷தருமபுரி மாவட்டத்தில் மரவள்ளி, கொய்யா, பப்பாளி, கடலை, பருத்தி பயிர்களில் அதிக அளவில் மாவுப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. இப்பூச்சிகளின் உடல் முழுவதும் வெள்ளை நிற மெழுகு காணப்படுவதால் பூச்சி மருந்துகள் மூலம் இதை கட்டுப்படுத்துவது கடினம்.

÷முதல்முறை மருந்து அடிக்கும்போது மேல் அடுக்கில் உள்ள பூச்சிகள் இறந்தாலும், அதற்கு கீழ் உள்ள பூச்சிகள் ஒரு வாரத்துக்குள் மீண்டும் பாதிப்பை உண்டாக்குகிறது. எனவே, இவ்வகை பூச்சிகளை கட்டுப்படுத்த உயிரியியல் கட்டுப்பாட்டு முறை சிறந்தது.

÷இதற்காக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தேசிய வேளாண் உயிரியியல் ஆய்வு மையம் ஆகியவை மாவுப்பூச்சியின் எதிர் உயிரியான அசிரோபேகஸ் பாப்பாயி என்னும் குளவி இனத்தை இலங்கையில் இருந்து இறக்குமதி செய்துள்ளது.

÷இவை பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன. குளவி இனத்தைச் சேர்ந்த 100 ஓட்டுண்ணிகள் மூலம் 3 மாதங்களில் 5 லட்சம் ஒட்டுண்ணிகளை இனப்பெருக்கம் செய்யலாம். ஒரு கிராமத்தில் 100 ஒட்டுண்ணிகளை விடுவதன் மூலம் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

÷வேளாண் அறிவியல் நிலையம் மூலம் செம்மனஹள்ளி கிராமத்தில் உள்ள துரைகவுண்டர் என்பவரது தோட்டத்தில் 4 ஏக்கர் பப்பாளி சாகுபடி பரப்பில் 100 குளிவி இன ஒட்டுண்ணிகள் விடப்பட்டன.

÷நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சி.துரைசாமி, வேளாண் அறிவியல் மையத் தலைவர் ப.ஸ்ரீதர், வேளாண் துணை இயக்குநர்கள் என்.மேகநாதன் (உழவர் பயிற்சி மையம்), ஆர்.மாது (மாவட்ட நீர்வடிப்பகுதி) உள்பட பலர் பங்கேற்றனர்.

**வெங்காயம் கிலோ ரூ. 80: வரலாறு காணாத விலை உயர்வு**

பா.ராஜவேல்

First Published : 20 Dec 2010 03:49:16 AM IST



சென்னை, டிச. 19: வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 80 ஆக அதிகரித்துள்ளது. இது சனிக்கிழமை விலையைக் காட்டிலும் ரூ. 40 அதிகம்.

பொங்கல் பண்டிகை வரை விலை குறைய வாய்ப்பு இல்லை; கிலோ ரூ. 100 வரை உயர வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் அச்சம் தெரிவித்தனர்.

வெங்காயம் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ. 20-க்கு விற்பனையானது. படிப்படியாக உயர்ந்து அதிகபட்சம் கிலோ ரூ. 40 வரை உயர்ந்தது.

இந்தியாவில் மகராஷ்டிர மாநிலத்தில்தான் வெங்காயம் அதிக அளவில் விளைகிறது. நாசிக் பகுதியில் விளையும் வெங்காயம் பெரும்பாலும் வெளி இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இந்நிலையில் சமீபத்தில் பெய்த பருவமழையில் பெரும்பாலான பகுதிகளில் வெங்காய பயிர்கள் அழுகியதால் வெங்காயத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தமிழகத்துக்கு கொண்டுவரப்படும் வெங்காயம் முற்றிலும் தடைபட்டுள்ளது.

ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் வெங்காய சீசன் முடிந்துவிட்டதால் அங்கிருந்தும் வரத்து குறைந்துவிட்டது.

தமிழகத்தில் கோவை, பொள்ளாச்சி, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் வெங்காயம் விளைகிறது. இந்த பகுதியில் வெங்காயம் பயிராவது ஜூலை மத்தியில் தொடங்கி ஆகஸ்ட் மாதம் வரையிலான ஒன்றரை மாதத்தில் முடிந்து விடும். எனவே இங்கு விளையும் வெங்காயம் அந்தந்தப் பகுதி தேவைக்கே போதுமானதாக உள்ளது.

பொள்ளாச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் விளையும் வெங்காயத்தில் 70 சதவீதம் கேரளத்துக்கு அனுப்பப்படுகிறது.

**பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்கக் கோரிக்கை**

First Published : 19 Dec 2010 11:27:44 AM IST

ஓட்டப்பிடாரம், டிச. 18: மாவட்டத்தில்விளைநிலங்களில் மழை வெள்ளம் பாதித்த அனைத்துப் பயிர்களுக்கும் ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ஆர். ராகவன், செயலர் பெருமாள் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை:

மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும், தொடர் மழை வெள்ளத்தால் அனைத்துப் பயிர்களுமே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே மத்திய, மாநில அரசுகள் பயிரிட்ட நிலங்களின் உச்சவரம்புகள் ஏதுமின்றி, ஏக்கருக்கு ரூ. 15ஆயிரம் வெள்ள நிவாரணம் வழங்க வேண்டும்.

இந்த நிவாரணத்தை அனைத்துப் பயிர்களுக்கும் வழங்க வேண்டும். இக்கோரிக்கையை வலியுறுத்தி ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, விவசாயிகளைத் திரட்டி இம் மாதம் 20-ல் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றனர் அவர்கள்.

**மானிய விலையில் கைத்தெளிப்பான்**

First Published : 19 Dec 2010 09:22:23 AM IST

பண்ருட்டி, டிச.18: பண்ருட்டி வட்டாரத்தில் கைத்தெளிப்பான்கள் 50 சதவீதம் மானிய விலையில் ரூ. 1,000-க்கு, தார்பாய் மானிய விலையில் ரூ. 4,400-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ÷தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிங்சல்பேட் 50 சதவீத மானிய விலையில் கிலோ ரூ. 19.20 வீதம் விற்பனை செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் பண்ருட்டி வேளாண்மை அலுவலர் எம்.அமரேசன் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் என்.டி.ரவிசேகர் ஆகியோரை தொடர்பு கொண்டு பயனடையலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் பி.ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.

**கூடுதல் விலைக்கு உரம்: விற்பனை நிலையத்துக்கு தடை**

First Published : 19 Dec 2010 10:51:49 AM IST

அரியலூர், டிச. 18: அரியலூர் மாவட்டம், திருமானூரில் கூடுதல் விலைக்கு உரம் விற்ற விற்பனை நிலையத்துக்கு வேளாண் துறை அலுவலர்கள் தடை விதித்துள்ளனர்.

பெரம்பலூர், அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ரெ. ரகுநாதன் உத்தரவின் பேரில், அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) அண்ணாதுரை, திருமானூர் வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) லதா, அரியலூர் வேளாண் அதிகாரி அருண்ராஜ்

ஆகியோர் கொண்ட குழுவினர் அரியலூர், திருமானூர் பகுதிகளிலுள்ள உர விற்பனை நிலையங்களில் உர விற்பனை தொடர்பாக திடீர் ஆய்வு செய்தனர்.

உர விற்பனை நிலையங்கள் விவசாயிகளுக்கு ரொக்கம், கடன் பட்டியல் கொடுப்பது, பட்டியலில் விவசாயிகளின் கையொப்பம் பெறுவது, அன்றாடம் உர இருப்பு விவரம், விலை விவரம் எழுதி வைப்பது ஆகிய நடைமுறைகளை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

ஆனால், ஆய்வில் பல்வேறு விற்பனை நிலையங்களில் இந்த விதிமுறைகளைப் பின்பற்றாமல் இருந்தது தெரிய வந்தது.

உர விற்பனை உரிமையாளர் ஒருவர், விவசாயிகளுக்கு பட்டியல் கொடுக்காமல் துண்டுச் சீட்டில் எழுதிக் கொடுத்தமைக்காகவும், கூடுதல் விலை வசூல் செய்தமைக்காகவும் அந்த விற்பனை நிலையத்தின் விற்பனை உரிமத்தை தாற்காலிகமாக நிறுத்தி வைத்து அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மேலும், விவசாயிகள் உர விற்பனை நிலையங்களில் உரம் வாங்கும் போது உர மூட்டையின் மேல் பொறிக்கப்பட்டுள்ள விலையை சரிபார்த்து பட்டியல் கேட்டு வாங்க வேண்டும் எனவும், பட்டியல் தர மறுக்கும் உர விற்பனையாளர் மீது தங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண் உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**சொட்டு நீர்ப் பாசன முறை குறித்த பயிற்சி முகாம்**

First Published : 19 Dec 2010 09:07:55 AM IST

திருவள்ளூர், டிச. 18: திருவள்ளூர் மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு சொட்டு நீர்ப் பாசன முறை குறித்த பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கு ஈக்காடு ஊராட்சியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷இதில், திருவள்ளூர் ஒன்றிய பெருந்தலைவர் வி.எஸ்.சண்முகம் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கோ. சுப்பிரமணியன் வரவேற்றார். ÷ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.

÷முகாமில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் விஜயகுமார், திட்ட விளக்க கையேட்டை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

÷வேளாண் உதவி இயக்குநர் சந்திரன் மாநில அரசின் திட்டங்களான ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய பயன்கள், திட்டத்தில் அரசு மானியம், உயர் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தியை பெருக்கும் திட்டம், ஆத்மா திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், துல்லிய பண்ணைத் திட்டம், தேசிய மூலிகைப்

பயிர் சாகுபடியின் பரப்பை அதிகரிக்கும் திட்டம் மற்றும் உலக வங்கி உதவி பெறும் திட்டங்கள் ஆகியன குறித்து விளக்கி கூறினார்.

÷இம்முகாமில், உதவி தோட்டக்கலை அலுவலர் நாகராஜன், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பாபு, பெரியசாமி மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் என பலர் பங்கேற்றனர்.

÷உதவி தோட்டக்கலை அலுவலர் நந்தகுமார் நன்றி கூறினார்.

**நெற்பயிரில் நெல் பழம் நோய் தாக்குதல்**

First Published : 19 Dec 2010 10:05:01 AM IST

திருவாடானை, டிச. 18: திருவாடானை தாலுகாவில் நெல் சாகுபடியில் நெல் பழம் நோய்த் தாக்குதலால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருவாடானை தாலுகாவில் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சம்பா பருவ நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, திருவாடானை தாலுகாவுக்குள்பட்ட ஆதியூர், திருவெற்றியூர், கிளவண்டி, கடம்பாகுடி, தோட்டாமங்கலம், பில்லுகுடி, தினையத்தூர் போன்ற இடங்களில் நெற் பயிர்கள் கதிர் விடும் நிலையில், நெல் பழம் எனும் கொடிய நோய்த் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

இந்நோய் தாக்கினால், நெல் மணிகளை மாவு போல, மஞ்சள் உருண்டையாக மாற்றிவிடும்.

கடந்த ஆண்டும் இதே பாதிப்பு உண்டாகி, விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை உண்டாக்கின.

இதுகுறித்து, திருவாடானை தாலுகா விவசாயிகள் சங்கத் தலைவர் நாகநாதன் கூறுகையில், விவசாயிகள் சிரமப்பட்டு விளைச்சல் செய்து, கதிர் அறுக்கும் சூழ்நிலையில், இந்நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டும் இதே பாதிப்பு ஏற்பட்டு, ஆட்சியர், அதிகாரிகள், எம்.பி. உள்ளிட்டோர் பார்வையிட்டனர். ஆனால் எங்களுக்கு இழப்பீடு ஏதும் கிடைக்கவில்லை. இந்த ஆண்டும் அதே சமயத்தில் பூச்சித் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைய நேரிடலாம். பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பாதித்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 120.05 அடி**

First Published : 19 Dec 2010 11:03:53 AM IST

தஞ்சாவூர், டிச. 18: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 120.05 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 5,205 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 4,552 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கல்லணையிலிருந்து காவிரியில் வினாடிக்கு 529 கன அடி, வெண்ணாற்றில் வினாடிக்கு 529 கன அடி, கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 1,500 கன அடி, கொள்ளிடத்தில் வினாடிக்கு 4,525 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 19 Dec 2010 10:05:09 AM IST

கமுதி, டிச. 18: கமுதி வட்டாரம், அபிராமத்தில் ராமநாதபுரம் வேளாண்மை துணை இயக்குநர் வேளாண் வணிகம் சார்பில் நீர் வள, நில வளத் திட்டத்தில் கிருதுமால் உப வடிநிலக் கோட்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது.

அபிராமம் பேரூராட்சித் தலைவர் கணேஷ்குமார் முன்னிலை வகித்தார். பரமக்குடி வேளாண்மை அலுவலர் பாண்டியன் வரவேற்றார்.

கிருதுமால் உப வடிநில கோட்டத்தில் நீர்வள, நில வளத் திட்டத்தில் பொதுப்பணி, வேளாண், தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மீன் வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் ஆராய்ச்சி நிலையம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை உள்ளிட்ட துறைகள் பங்கேற்பது பற்றியும்,அறுவடை பின்செய் நேர்த்தி, தொழில்நுட்பங்கள் பற்றியும், விளைபொருள்களை விற்பனை செய்து, அதிக லாபம் பெறுவது பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

பண்ணைக் குட்டைகள் அப்மைப்பது, வேளாண் கருவிகள் விநியோகம், சொட்டுநீர்ப் பாசனம் பற்றி வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் ராஜம் முருகேசன் விவரித்தார்.

உழவர் சந்தை பற்றியும், காய்கறி சாகுபடி பற்றியும், உழவர் சந்தையில் விற்பனை செய்வது பற்றியும் கமுதி உழவர் சந்தை வேளாண்மை அலுவலர் ஞானசேகரன் கூறினார்.

மீன் வளர்ப்பது பற்றி மீன்துறை ஆய்வாளர் கோபிநாத் பேசினார். வேளாண்மை உதவி அலுவலர் சிவசங்கர் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் முருகன், கருணாகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

**வெள்ளச் சேத அறிக்கை ஒப்படைப்பு**

First Published : 19 Dec 2010 09:26:30 AM IST

திண்டிவனம், டிச. 18: திண்டிவனம் வழியாக வந்த மத்தியக் குழுவிடம் விழுப்புரம் மாவட்ட மழை பாதித்த பகுதிகளின் அறிக்கையை மாவட்ட ஆட்சியர் பழனிச்சாமி வியாழக்கிழமை இரவு வழங்கினார்.

÷தமிழகத்தின் கோரிக்கை குறித்தும், பாதித்த பகுதிகளை நேரில் ஆய்வு செய்யவும் தமிழகம் வந்துள்ள 7 பேர் கொண்ட குழுவில் வியாழக்கிழமை திண்டிவனத்துக்கு வந்த மத்திய உள்துறை இணைச்செயலர் எஸ்.விஸ்வநாதன் மற்றும் மத்திய திட்டக் குழு முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் முரளிதரன் உள்பட நான்கு பேர் கொண்ட குழுவினரை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனிச்சாமி நேரில் சந்தித்து வரவேற்பு அளித்தார்.

÷இதைத் தொடர்ந்து அரசு விருந்தினர் மாளிகையில் அவர்களை சந்தித்த மாவட்ட ஆட்சியர், மாவட்டத்தை பொருத்தவரை மரக்காணம் மற்றும் வானூர் பகுதிகளில் மட்டும் அண்மையில் பெய்த மழையினால் 25 சதவீதத்துக்கு பாதிப்பு உள்ளதை சுட்டிக் காட்டினார்.

÷இதை ஒரு அறிக்கையாக குழுவினரிடம் மாவட்ட ஆட்சியர் வழங்கினார். நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு கடலூர், திருவாரூர் ஆகிய மாவட்ட பார்வையிட அக்குழு புறப்பட்டு சென்றது.

÷நிகழ்ச்சியின் போது திண்டிவனம் கோட்டாட்சியர் (பொறுப்பு) முத்துசாமி, வட்டாட்சியர் வீரப்பன் மற்றும் வருவாய் ஆய்வாளர் பிரபுவெங்கடேசன் உள்ளிட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

**நிரம்பி வழியும் மாமல்லபுரம் கடும்பாடி ஏரி**

First Published : 20 Dec 2010 12:00:00 AM IST

Last Updated :



மாமல்லபுரத்தை அடுத்த கடும்பாடி ஏரி நிறைந்ததில் கலங்கல் அருவிபோல் ஓடும் காட்சி.

செங்கல்பட்டு, டிச 19: ஒருவாரமாக பெய்துவரும் மழையில் மாமல்லபுரத்தை அடுத்த கடும்பாடி ஏரி நிறைந்து கலங்கல் செல்வதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மகிழச்சியில் உள்ளனர். கடும்பாடி ஏரியைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் விவசாயத்தை நம்பியே உள்ளனர். மாமல்லபுரத்தை அடுத்த கடும்பாடி கிராமத்தில் பிரசித்திப் பெற்ற கடும்பாடி அம்மன் கோயில் உள்ளது. உள்ளூர் மற்றும் வெளியூர் மக்களுக்கு இது குல தெய்வமாக விளங்கி வருகிறது.

இந்நிலையில் கோயிலையொட்டிச் செல்லும் கடும்பாடி ஏரியில் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏரி நிறைந்து கலங்கல் ஓடுவதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

ஏரி நிறைந்ததன் காரணமாக ஏரியைச் சுற்றியுள்ள விளை நிலங்களில் பயிர் வைத்து விவசாயம் செய்யமுடியும் என்ற நம்பிக்கை அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ளது.

சனிக்கிழமை வானம் சற்று வெளுத்ததை அடுத்து அப்பகுதி மக்கள் ஏரி கலங்கல் அருகே துணி துவைப்பதிலும் ஆண்களும் சிறுவர்களும் நீரில் விளையாடியும் உற்சாகமாக காணப்பட்டனர்.

**வங்கக்கடலில் புயல் சின்னம்: தென் மாவட்டங்களில் மழை நீடிக்கும்**

First Published : 20 Dec 2010 12:46:42 AM IST



சென்னை, டிச. 19: தென் கிழக்கு வங்கக் கடலில் உருவான புதிய புயல் சின்னம் காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடுத்த 2 நாள்களுக்கு இடி, மின்னலுடன் மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென் கிழக்கு வங்கக்கடலில் சனிக்கிழமை உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி தென் மேற்கு வங்கக்கடலில் தமிழகம், இலங்கை இடையே இருந்தது. இது தொடர்ந்து மேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது.

இதன் காரணமாக, தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடுத்த 2 நாள்களுக்கு இடி, மின்னலுடன் மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில்... சென்னையில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் சில இடங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

திங்கள்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை பெய்யக் கூடும்.

திங்கள்கிழமை குறைந்தபட்ச வெப்ப நிலை 20 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குளிர் காற்று ஏன்? வட மாநிலங்களில் கடும் குளிர் காற்று வீசத் தொடங்கியுள்ளது.

வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வீசும் குளிர் காற்று, காற்றில் ஈரப்பதம் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் சென்னையில் குளுமை அதிகரித்துள்ளது.

குறைந்தபட்ச வெப்ப நிலையில் 1 டிகிரி செல்சியஸ் மட்டுமே குறைந்துள்ளது. மழைக்காலம் முடிந்து குளிர்காலம் தொடங்கும் சமயத்தில் இத்தகைய சூழல் நிலவுவது இயல்பான ஒன்றுதான் என்றும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்

**பப்பாளி மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த தோட்டத்தில் ஒட்டுண்ணிகள் விடுதல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,01:19 IST

தர்மபுரி: "பப்பாளி மரங்கள் உள்ளிட்ட செடிகளை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டப்படுத்த குளவி பூச்சிகளை தோட்டங்களில் விட்டு கட்டுப்படுத்தலாம்' என வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பப்பாளி மாவு பூச்சிகள் பப்பாளி மட்டுமல்லாமல் 70 வகையான தாவர செடிகளை தாக்கி வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் மரவள்ளி, கெய்யா, பப்பாளி, கடலை, பருத்தி மற்றும் பிற வயல்களில் இதன் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது. இப்பூச்சிகள் உடல் முழுவதும் வெள்ளை நிற மெழுகு பொருள் காணப்படுவதால், பூச்சி மருந்துகள் மூலம் இதை கட்டுப்படுத்துவது கடினமாகும். முதல் முறை மருந்து அடிக்கும் போது மேல் அடுக்கில் உள்ள பூச்சிகள் இறந்தாலும், அதற்கு கீழ் உள்ள பூச்சிகள் ஒரு வாரத்துக்குள் மீண்டும் பாதிப்பை உண்டாக்கும்.

இவ்வகையான பூச்சிகளை கட்டுப்படுத்த உயிரியியல் கட்டுப்பாட்டு முறையே சாலச்சிறந்தது. இதற்காக பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் மாவுப்பூச்சியின் எதிர் உயிரி "அசிரோபேகஸ்' பாப்பாயி (குளவி இனம்) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் மைசூர் இந்திய தேசிய வேளாண் உயிரியியல் ஆய்வு மையம் ஆகியவற்றின் உதவியுடன் பூச்சிகளை இனபெருக்கம் செய்யப்படுகிறது. இந்த குளவி இனத்தை சேர்ந்த 100 ஒட்டுண்ணிகள் மூலம்

மூன்று மாதத்தில் ஐந்து லட்சம் ஒட்டுண்ணிகள் இனபெருக்கம் செய்ய இயலும் என்பதை (ஒரு மாத) 100 ஒட்டுண்ணிகளை ஒரு கிராமத்தில் விடுவதன் மூலம் மாவு பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் செம்மனஅள்ளி கிராமத்தில் உள்ள விவசாயி துரை என்பவரது நான்கு ஏக்கர் பப்பாளி சாகுபடி பரப்பில் 100 குளவி இனத்தை சேர்ந்த ஒட்டுண்ணிகள் முதல் கட்டமாக விடப்பட்டுள்ளது.
ஒட்டுண்ணி விடும் நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குனர் துரைசாமி, வேளாண் அறிவயில் மைய தலைவர் ஸ்ரீதர், வேளாண் இணை இயக்குனர் மேகநாதன், துணை இயக்குனர் மாது, உதவி வேளாண் இயக்குனர் மதுபாலன், உதவி பேராசிரியர் சண்முகம் உட்பட பலர் பங்கேற்றனர். ஒட்டுண்ணிகள் விடப்பட்ட வயல்களில் பூச்சி மருந்து உபயோகத்தை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மேலும் விபரங்கள் பெற விரும்புவோர் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம்.

**வெங்காயம் விலை இரண்டு மடங்காக உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,09:01 IST

சென்னை : பற்றாக்குறை காரணமாக வெங்காயத்தின் விலை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. கிலோ ஒன்று ரூ.40 க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த வெங்காயம், தற்போது ரூ.80 ஆக உயர்ந்துள்ளது. வெங்காயம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் மகாராஷ்டிர மாநிலத்தில் அதிக மழை காரணமாக வெங்காய பயிர்கள் அழுகி உள்ளன. இதனால் தமிழகத்திற்கு வரும் வெங்காய வரத்து முற்றிலும் முடங்கி உள்ளது. பொங்கல் பண்டிகை வரை விலை குறைய வாய்ப்பில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**தண்டலம் ஊராட்சியில் கால்நடைகளுக்கு மர்ம நோய்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,00:46 IST

காஞ்சிபுரம் : தண்டலம் ஊராட்சியில் மர்ம நோய் தாக்கியதால் மூன்று ஆடுகள் இறந்தன. ஐந்து மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.காஞ்சிபுரத்திலிருந்து புரிசை செல்லும் சாலையில் அமைந்துள்ளது, "139 தண்டலம் ஊராட்சி!' இவ்வூராட்சியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்

வசிக்கின்றனர்.இங்குள்ள விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகளை நோய் தாக்கினால் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மதுரமங்கலம் கால்நடை மருத்துவமனை அல்லது காஞ்சிபுரம் தலைமை கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது.சமீபத்தில் பெய்த மழையில் தண்டலம் ஊராட்சிப் பகுதியை மழைநீர் சூழ்ந்தது. கால்நடைகள் மேய்ச்சலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மூன்று ஆடுகள் இரண்டு நாட்களுக்கு முன் திடீரென இறந்தன. மாடுகளுக்கு தொண்டை, கால்கள் வீக்கமாக உள்ளன.தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி(40) கூறியதாவது:கடந்த 15 நாட்களாக பெய்த தொடர் மழையால், அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. தண்ணீரை வடிய வைத்து பயிர்களை மீட்கும் பணியை துவக்கியுள்ளோம். எனவே, கால்நடைகளை கண்டுகொள்ளவில்லை.மேய்ச்சலுக்கு கொண்டு செல்லாமல் கொட்டகையில் கட்டி வைத்தோம். ஆடுகள் தொடர்ந்து ஐந்து நாட்கள் மழையில் நனைந்து சில ஆடுகள் இறந்தன.மதுரமங்கலம் கால்நடை மருத்துவமனைக்கு தகவல் கொடுத்தோம். கால்நடைகளை மருத்துவமனைக்கு அழைத்து வாருங்கள் அல்லது நாங்களே நேரில் வந்து சிகிச்சை அளிக்கிறோம் எனக் கூறியுள்ளனர்.இவ்வாறு தட்சிணாமூர்த்தி கூறினார்.

**உழவர் சந்தையில் 3 மடங்கு நுகர்வோர் வருகை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,01:34 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் வெளி மார்க்கெட்டில் காய்கறிகள் அதிக விலைக்கு விற்பதால், கடந்த ஒரு வாரத்தில் உழவர் சந்தைக்கு காய்கறி வாங்க வருவோர் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் மழையால் காய்கறி பயிர்கள் சேதம் அடைந்தது. குறிப்பாக தக்காளி, கேரட், பீட்ரூட் ஆகிய பயிர்கள் மழையில் நனைந்து அதிக சேதம் அடைந்தது. இதனால், உள்ளூர் மற்றும் வெளியூர் மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து குறைந்து கடும் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. காய்கறிகள் வரத்து குறைந்துள்ளதை காரணம் காட்டி வியாபாரிகள், வெளிமார்க்கெட்டுகளில் காய்கறிகளை விலைக்கு  விற்பனை செய்கின்றனர்.

குறிப்பாக சில்லறை விற்பனை செய்வோர் தினம் ஒரு விலைக்கு காய்கறிகளை விற்பனை செய்கின்றனர். அதேநேரத்தில் உழவர்சந்தையில் விவசாயிகள், பொதுமக்கள் நலன் பாதிக்காத வகையில் காய்கறிகள் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. வெளி மார்க்கெட்டில் நேற்று தக்காளி ஒரு கிலோ 40 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டது. உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி 28 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதேபோல் கத்திரி, வெண்டை, பீர்கன், முள்ளங்கி, கேரட், பீட்ரூட் ஆகியவற்றின் விலையும் வெளி மார்க்கெட்டை விட உழவர்கள் சந்தையில் 10 ரூபாய் குறைத்து விற்பனை செய்யப்பட்டது.

இதனால், பொதுமக்கள் தற்போது உழவர்சந்தைக்கு வந்து காய்கறிகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர். கிருஷ்ணகிரி சுற்றுவட்டார விவசாயிகள் கார்னேசன் திடல் ரோடில் தினந்தோறும் காலை நேரத்தில் கூடும் மார்க்கெட்டில் தங்களது காய்கறிகளை விற்பனைக்கு வைக்கின்றனர். இங்குதான் பொதுமக்கள் பெரும்பாலும் காய்றிகள் வாங்கி வந்தனர். தற்போது பொதுமக்கள் உழவர்சந்தை செல்வதால் கார்னேசன் திடல் மார்க்கெட்டில் காய்கறி விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வாரம் உழவர்சந்தைக்கு 500 பேர் மட்டும் காய்கறி வாங்க வந்தனர். இந்த வாரத்தில் 2,000 பேருக்கு மேல் உழவர் சந்தைக்கு காய் வாங்க வந்துள்ளனர். இதுகுறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறுகையில், ""உழவர்சந்தையில் காய்றிகள் நியாமான விலையில் விற்பனை பொதுமக்கள் அறிந்துள்ளனர். கடந்த வாரம் வரை உழவர் சந்தையில் காய்கறிகள் விற்பனை யாகாமல் தேக்கமடைந்தது. தற்போது காய்கறிகள் பொதுமக்கள் வருகையால் உடனுக்குடன் விற்று தீர்ந்து விடுகிறது. அதனால், நுகர்வோர் வருகை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இந்த வருகை தொடர்ந்து நீடிக்கும் வாய்ப்புள்ளதால், விவசாயிகள் வருகையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது., " என்றார்.

**மழை பாதித்த நெற்பயிர் காக்க அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,01:26 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர் கடந்த வாரங்களில் பெய்த நெற்பயிர் முற்றிலும் மூழ்கியும், பாதிக்கும் மேல் மழைநீரில் மூழ்கியும் நீர் வடிந்தும், வடியாலும் உள்ளது.
இந்நிலையில், பயிர்களுக்கு தேவையான சத்துக்கள் கிடைக்காததால் பூச்சி, நோய் எதிர்ப்பு தன்மை இல்லாத நிலையில் உள்ளது. தற்போது, காற்றின் ஈரப்பதம் அதிகமாகவும், இரவு நேர வெப்பநிலை குறைந்தும், பனீ மூட்டத்துடனும், பகலில் மேகமூட்டத்துடனும் குறைந்த அள வு வெப்பநிலை நிலவுகிறது. இதனால், நெற்பழம் நோய் அதி க அளவில் நெல் மணிகளை தாக் கி, நெல் மணிகள் அனைத்தும் பதராகிவிடும் நிலை உள்ளது.

இந்நோய் தாக்கும் முன் நெற்பயிர் தொண்டைக்கதிர் நிலையில் ஒரு ஏக்கருக்கு பிரப்பிஹோனோசோல் 200 மில்லி அல்லது கார்பன்டிசம் மற்றும் மான் கோசப் மருந்து கலவை 300 மில்லி, சூடோமோனோஸ் ஒரு கிலோ ஆகியவற்றில் ஏதாவது ஒரு பூச்சான கொல்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து இந்நோயை கட்டுப்படுத்த வேண்டும். சூடோமோனோஸ் மருந்து அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு

மானியத்தில் வழங்கப்படுகிறது. தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குனரை அணுகி, பயன்பெறலாம், என திருத்துறைப்பூண்டி உதவி வேளாண் இயக்குனர் நடேசன் கேட்டுக் கொண்டார்.

## நேரடி நெல் விதைப்பு முறை வேளாண் பேராசிரியர் ஆய்வு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,01:21 IST

ஊத்தங்கரை: ஊத்தங்கரை அடுத்த தீர்த்தகிரிவலசையில் நேரடி நெல் விதைப்பு முறையில் நெல் சாகுபடி செய்த வயலை பையூர் வேளாண் பேராசிரியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் சாகுபடி முறையில் நேரடி நெல் விதைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊத்தங்கரை அடுத்த தீர்த்தகிரிவலசை கிராமத்தில் காளியப்பகவுண்டர் என்ற விவசாயி நேரடி நெல் விதைப்பு முறையில் நெல் சாகுபடி செய்துள்ளார். இவரது நெல் வயலை பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய வேளாண் பேராசிரியர் புத்தன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது ஒரு சதுர மீட்டர் பரப்பில் உள்ள மொத்த துர்களின் எண்ணிக்கை, கதிர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்து ஆய்வு செய்தார். மேலும் அவர், ராஜராஜன் 1000 நெல்சாகுபடி தொழில்நுட்பத்தையும், அதிலுள்ள தூர்களின் எண்ணிக்கையும் பார்வையிட்டார். உதவி வேளாண்மை இயக்குனர் பெரியசாமி, தமிழ்செல்வன், வேளாண்மை அலுவலர்கள் பன்னீர்செல்வம், சீனிவாசன், உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலை பயனாளிகளுக்கு, இடுபொருள் வழங்கும் விழா

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,00:28 IST

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் தோட்டக்கலை பயனாளிகளுக்கு இடுபொருள் வழங்கும் முகாம் நடக்கிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், உயர் தொழில் நுட்ப உற்பத்தி அதிகரிப்பு திட்டம், தேசிய மூலிகை பயிர் இயக்க திட்டம், துல்லிய பண்ணைய திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், நீர்வள நிலவள திட்டம் ஆகியவற்றிற்கு தெரிவு செய்யப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு கிராம வாரியாக இடுபொருட்கள் மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விநியோகம் செய்யப்படும். இந்த முகாம் மாவட்டத்திலுள்ள அனைத்து 12 வட்டாரங்களிலும் இன்று முதல் ஜன.15ம் தேதி வரை நடக்கும். முதற்கட்டமாக நாளை ஓட்டப்பிடாரம், புதூர், கயத்தார், கருங்குளம், திருவைகுண்டம், ஆழ்வார்

திருநகரி வட்டாரங்களிலுள்ள திருவைகுண்டம், நம்பிபுரம் பன்னீர்குளம், காசிலிங்கபுரம் அனியாபரநல்லூர், வெங்கடேசபுரம் கிராமங்களில் இடுபொருள் விநியோக முகாம் நடக்கிறது.

**ஈரோடு மாவட்டத்தில் மழை ஓய்ந்தது: ஆந்திர வரமிளகாய் விற்பனை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,01:33 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் மழை ஓய்ந்த பிறகு, இரு நாட்களாக வர மிளகாய் விற்பனை அதிகரித்துள்ளது. ஆந்திராவின் "எண்டோ-5' ரக மிளகாய் வாங்க ஈரோடு மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். வடகிழக்கு பருவமழையால் ஈரோடு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மழை வெளுத்து வாங்கியது. பல ஊர்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. காய்கறி, மளிகை சாமான், ஜவுளி, வீட்டுப் பொருட்கள் விலையேறியதால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டனர். மழையின் போது வரமிளகாய், கொத்தமல்லி விற்பனை கடுமையாக சரிந்தது. இவற்றை வாங்க ஆளில்லாத காரணத்தால், கொள்முதல் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான மூட்டை மிளகாய் வத்தல், கொத்தமல்லி விற்பனையாகாமல் தேக்கமடைந்தன. பருவமழை ஓய்ந்துவிட்ட நிலையில், ஒரு வாரமாக வெயில் கொளுத்துகிறது. இதனால், பொதுமக்கள் வழக்கம் போல வெளியில் நடமாட துவங்கி விட்டனர். விற்பனையில்லாமல் சரிந்து கிடந்த அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள், தேங்கி கிடந்த மளிகை பொருட்களின் விற்பனை சூடு பிடித்துள்ளது. இரு நாட்களாக மிளகாய் வத்தல் மற்றும் கொத்தமல்லி ஆகியவற்றின் விற்பனை படு ஜோராக இருக்கிறது. குறிப்பாக, ஆந்திர மாநிலத்தின் "எண்டோ- 5' ரக மிளகாய் விற்பனை அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, ஒரு கிலோ "எண்டோ-5' ரக மிளகாய் 75 ரூபாய்க்கும், நாட்டு வத்தல் 60லிருந்து 70க்கும், குண்டு வத்தல் 50 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. நாட்டு கொத்தமல்லி கிலோ 50 ரூபாய்க்கும், சாதா மல்லி 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

**கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,01:40 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடை துறை சார்பில் வரும் 21ம் தேதி துவங்கி 30ம் தேதி வரை கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் நடக்கிறது.

இது குறித்து கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடை வளர்போருக்கு சிரமம் ஏற்படாமல் அவர்களுடைய கிராமத்துக்கு நேரடியாக சென்று சிறப்பு

மருத்துவர்களை கொண்டு  மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. அதன்படி வரும் 21ம் தேதி கிருஷ்ணகிரி யூனியன் பெரியமுத்தூர் பஞ்சாயத்து அகரஹாரம், சூளகிரி யூனியன் கும்மாளம், 23ம் தேதி காவேரிப்பட்டணம் யூனியன் மிட்ட அள்ளி, தளி யூனியன் குப்பட்டி, 24ம் தேதி வேப்பனப்பள்ளி யூனியன் குரியனப்பள்ளி, 28ம் தேதி பர்கூர் யூனியன் ஜம்புகுட்டப்பட்டி, கெலமங்கலம் யூனியன் தாவாக்கரை, 29ம் தேதி மத்தூர் யூனியன் கருவானூர், 30ம் தேதி ஊத்தங்கரை யூனியன் ரெட்டிப்பட்டி ஆகிய இடங்களில் சிறப்பு முகாம் நடக்கிறது.

முகாமில், கால்நடைகளுக்கு தேவையான அனைத்து மருத்துவ வசதிகளும், தடுப்பூசிகளும், செயற்கை முறை கருவூட்டலும் இலவசமாக வழங்கப்படும். மேலும், கால்நடை வளர்போருக்கு நவீன கால்நடை வளர்ப்பு, தீவன முறைகளை பற்றியும் கால்நடை மருத்துவர்களால் ஆலோசனைகளும் வழங்கப்படும். நாடாளுமன்ற, சட்டமன்ற, பஞ்சாயத்து தலைவர்ளும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள், அதிகாரிகள் முகாம் சிறப்புடன் நடக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மக்காச்சோளம் சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,02:13 IST

கரூர்: அரவக்குறிச்சி அருகே ஆண்டிபட்டிக்கோட்டியில் விவசாயிகளுக்கு மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. கரூர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். ஜமீன் ஆலமரத்துப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் நாகப்பன், துணைத்தலைவர் பிச்சைமுத்து முன்னிலை வகித்தனர்.வேளாண் துறை துணை இயக்குனர் சவுந்திரம் விவசாயிகளுக்கு மத்திய திட்டம் மற்றும் அதைப் பயன்படுத்தி கொள்வது குறித்து விளக்கினார். சிறுகமணி வேளாண்மை அறிவியல் மைய பேராசிரியர் சகுந்தலை விவசாயிகளுக்கு மக்காச்சோளம் சாகுபடியில் நவீன தொழில் நுட்பம் பயன்படுத்திக் கூடுதல் லாபம் பெறுவது குறித்து விளக்கினார்.மக்காச்சோளம் சாகுபடி, அரசின் திட்டம் குறித்து துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் பேசினார். முகாமில், 50 விவசாயிகள் பங்கேற்றனர். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் மோகன்குமார் நன்றி கூறினார்.

**நிலக்கடலை விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:34 IST

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதியில் தை மாதப்பட்டத்திற்கு நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் உரம் வழங்கப்படவுள்ளது என வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளனர். கிணத்துக்கடவு பகுதிகளில் தை மாதத்தில், அரசு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, ஒரு எக்டருக்கு ஒரு விவசாயிக்கு 400 கிலோ ஜிப்சம் உரம் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதனை பெற விவசாயிகள் ரேஷன் கார்டு நகல், நில அளவை எண் ஆகியவற்றுடன் கிணத்துக்கடவு மைய வேளாண்மை அலுவலகத்தை அணுக வேண்டும். மேலும், ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக இரண்டு எக்டருக்கு ஜிப்சம் உரம் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. இத்தகவலை வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) வடிவேல் தெரிவித்தார்.

**தோட்டக்கலை திட்டம்; ஊராட்சி தலைவர்களுக்கு விளக்க முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:52 IST

அவிநாசி: ஊராட்சி தலைவர்களுக்கு, தோட்டக்கலை திட்டங் கள் குறித்த விளக்க முகாம், அவிநாசியில் நடந்தது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் திட்ட விளக்க கூட்டம், அவிநாசியில் நடந்தது. ஒன்றிய தலைவி சாந்தி தலைமை வகித்தார். அவிநாசி வட்டார 34 ஊராட்சிகளின் தலைவர், துணை தலைவர்கள் பங்கேற்றனர். தோட்டக்கலை அலுவலர் ஜெரினாபேகம், வேளாண் உதவி அலுவலர்கள் ராஜி, லோகநாதன், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய தோட்டக்கலை வழங்கும் மானியம் குறித்து விளக்கினர்.

**வேளாண் கருவிகளின் செயல்விளக்க முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:26 IST

பொங்கலூர்: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நவீன வேளாண் கருவிகளின் செயல் விளக்க முகாம், பெருந்தொழுவு கவுண்டம்பாளையத்தில் நடந்தது. திருப்பூர் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஜெகனாதன் தலைமை வகித்தார். உதவி செயற்பொறியாளர் துரைராஜ், உதவி பொறியாளர் ரேணுகாதேவி ஆகியோர் விவசாயிகளுக்கு கருவிகளின் செயல்பாடுகள் பற்றி விளக்கம் அளித்தனர்.டிராக்டரால் இயங்கும் குழி எடுக்கும் கருவி, லேசர் மூலம் இயங்கும் நிலம் சமன்படுத்தும் சமதள கருவியால் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பெருந்தொழுவு பி.ஏ.பி., பாசன சபை தலைவர்கள் நடராஜ், முத்துசாமி,

முன்னாள் தலைவர் செந்தில், பெருந்தொழுவு ஊராட்சி துணை தலைவர் ரவி, முன்னாள் தலைவர் ராமசாமி, விவசாயிகள் சங்க பொங்கலூர் ஒன்றிய தலைவர் ஈஸ்வரமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் சங்க கொடியேற்று விழா**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,01:52 IST

கிருஷ்ணகிரி: மத்தூர் ஒன்றியம் கொடமாண்டப்பட்டி, மூக்கம்பட்டி, முருக்கம்பட்டி, கோட்டூர், மேல்சந்தம்பட்டி, அத்திப்பள்ளம், கமலாபுரம், வாலிபட்டி, கிருஷ்ணாபுரம், மத்தூர் உள்ளிட்ட பல கிராமங்களில் தமிழக விவசாயிகள் சங்க கொடியேற்று விழா நடந்தது. மாநில துணை தலைவர் ராமகவுண்டர் தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாகிகள் சுந்தரேசன், தேவேந்திரன், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். கிழக்கு மாவட்ட செயலாளர் செந்தில்குமார் வரவேற்றார். மாநில தலைவர் டாக்டர் சிவசாமி கொடியேற்றி வைத்து கோரிக்கைகள் குறித்து பேசினார். மாநில பொருளாளர் வெங்கடாசலம், ராஜேந்திரன், பெருமாள், தேவன், மாவட்ட மகளிர் அணி பெருமா, தர்மபுரி மாவட்ட நிர்வாகிகள் செல்வம், வேலன், வடிவேல், ரவி, ரவிந்தராசு, கருணாமூர்த்தி, கோவிந்தராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். செல்வம் நன்றி கூறினார்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:54 IST

ராமநத்தம் : ராமநத்தம் அடுத்த பட்டாக்குறிச்சி ஊராட்சியில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. ஊராட்சி துணைத் தலைவர் சின்னசாமி தலைமை தாங்கினார். முன்னாள் தலைவர் சின்னதுரை, ஆசிரியர் கமலக்கண்ணன் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்பு உதவியாளர் வேல்முருகன் வரவேற்றார். இதில் மங்களூர் வட்டார கால்நடை மருத்துவர்கள் ஒரங்கூர் கார்த்திகேயன், மங்களூர் சுப்ரமணியன், வேப்பூர் கண்மணி ஆகியோர் மாடுகளுக்கு இலவச சினை ஊசி, பொது சிகிச்சை, மலடு நீக்கம், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், 250 பசுக்களுக்கு சப்பை நோய் தடுப்பூசி உட்பட 949 கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தனர்.

இதேபோல் நேற்று முன்தினம் வேப்பூர் அடுத்த கச்சிமைலூர் ஊராட்சியில் நடந்த கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாமிற்கு ஊராட்சி தலைவர் கண்ணகி தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் பெரியசாமி, வார்டு உறுப்பினர் கனகம் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்பு உதவியாளர் உமாபதி வரவேற்றார். இதில் உதவி கால்நடை மருத்துவர் சுப்ரமணியன்,

கார்த்திகேயன், திருநாவுக்கரசு, கண்மணி, கால்நடை ஆய்வாளர் சுப்ரமணியன் ஆகியோர் பசுக்களுக்கு சினை ஊசி, பொது சிகிச்சை, சிறு அறுவை சிகிச்சை அளித்தனர்.

**பயிர் சேத பாதிப்பு கணக்கெடுப்பு பணி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:59 IST

சிறுபாக்கம் : மங்களூர் ஒன்றியத்தில் மழையால் சேதமடைந்த பயிர் பாதிப்பு குறித்து கணக்கெடுக்கப்பட்டது. மங்களூர் ஒன்றியத்தில் உள்ள 66 ஊராட்சிகள், 40 துணை கிராமங்களில் அண்மையில் பெய்த கன மழையால் மழைநீர் வயல் வெளிகளில் தேங்கி நின்றது. இதனால் மரவள்ளி, மஞ்சள், கோலியஸ் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்தன. பாதிப்படைந்த பயிர் சேதம் குறித்து கணக்கெடுத்திட கலெக்டர் சீத்தாராமன் உத்தரவிட்டார். அதன்படி மங்களூர் தோட்டக்கலை வேளாண் உதவி இயக்குனர் முருகன் தலைமையில் அந்தந்த பகுதி வி.ஏ.ஓ.,க்கள் கலந்து கொண்டு அடரி, பொயனப்பாடி, கொளவாய், களத்தூர், கீழ்ஒரத்தூர், விநாயகநந்தல், கச்சிமயிலூர், ஆலம்பாடி, வள்ளிமதுரம், பனையாந்தூர் உட்பட 35 கிராமங்களில் கணக்கெடுப்பு நடத்தினர். இதில் தோட்டக்கலை அலுவலர் தர்மலிங்கம், பகுதி அலுவலர் கோவிந்தராஜ், உதயசூரியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மானிய விலையில் மிளகாய் விதைகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:38 IST

மயிலம் : மயிலம் வட்டார வேளாண்மைத் தோட்டக் கலைத் துறையின் சார்பில் மிளகாய் விதைகள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மயிலம் ஒன்றியம் செண்டியம்பாக்கம் கிராமத்தில் தோட்டப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு உயர் ரக மிளகாய் விதைகள் மற்றும் உரம், பூச்சி, மருந்துகள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இவற்றை தோட்டக் கலை உதவி இயக்குனர் சண்முகம் வழங்கினார். ஊராட்சி தலைவர் ரகுபதி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாபு, விஜயகுமார், புரு÷ஷாத்தமன் உடனிருந்தனர்.

**வேர்க்கடலை பயிருக்கு ஜிப்சம் மானிய விலையில் வினியோகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,00:46 IST

கடலூர் : தேசிய வேளாண் வளர்ச்சி  திட்டத்தின் கீழ் கடலூர் வட்டாரத்தில் வேர்க்கடலை சாகுபடிக்குத் தேவையான ஜிப்சம் 50 சதவீத மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மணிலா பயிருக்கு எக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இட வேண்டும். அடியுரமாக 200 கிலோ இட வேண்டும். விதைப்பு செய்து 45ம் நாளில் மேலுரமாக 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். ஜிப்சம் இடும் போது நிலத்தில் போதியளவு ஈரம் இருக்க வேண்டும்.
ஜிப்சத்தில் 24 சதவீதம் சுண்ணாம்பு சத்தும், 18 சதவீதம் கந்தக சத்தும் உள்ளன. சுண்ணாம்புச்சத்து காய்கள் திரட்சியாகவும், அதிக எடை உள்ளதாகவும் உருவாக உதவுகிறது. கந்தக சத்து வேர்க்கடலையில் எண்ணெய் சதவீதத்தை அதிகரிக்கிறது. கடலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள ஜிப்சத்தை மானிய விலையில் விவசாயிகள் வாங்கிப் பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கரும்பு உற்பத்தியாளர் சங்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,22:35 IST

திருவெண்ணெய்நல்லூர் : சர்க்கரை ஆலைத்தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முன் வரவேண்டுமென கரும்பு உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர் நலச்சங்க நிர்வாகி கணபதி அய்யர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் 18 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. 1980 முதல் 1990ம் ஆண்டு வரை சர்க்கரை ஆலை ஊழியர்கள் அரசு ஊழியர்களைவிட  அதிக ஊதியம் பெற்று வந்தனர். 2010 ல் அரசு ஊழியர்கள் பெறும் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு கூட பெறமுடியாத அவல நிலையில் சர்க்கரை ஆலை ஊழியர்கள் உள்ளனர். ஊதியப்பிரச்னைக்காக ஆலை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.  ஆலை தொழிலாளர்களின் பிரச்னைகளை அரசு தீர்த்து வைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**வேளாண்மை கூட்டுறவு சங்க ஆலோசனைக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,00:53 IST

விழுப்புரம் : தமிழ்நாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் கள் சங்க மாநில நிர்வாகக் குழு கூட்டம் விழுப்புரத்தில் நடந்தது. சங்க மாவட்ட தலைவர் பாண்டுரங்கன் தலைமை தாங்கினார். பொருளாளர் கலியபெருமாள் முன்னிலை வகித்தார். மாநில தலைவர் குமரேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்

றினார். பணியாளர்களுக்கு புதிய ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டதில் உள்ள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். அங்காடி பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் அறிவிக்கப்பட வேண்டும் உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை(20ம் தேதி) விழுப்புரம் கலெக்டர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருப்பதாக கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. துணை தலைவர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

**மழைநீரில் அழுகிய மரவள்ளி பயிர்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,23:03 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் தேங்கிய மழைநீரில் மரவள்ளிக் கிழங்குகள் அழுகியதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சிறுபாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நீர்ப்பாசன விவசாயிகள் நடப்பு ஆண்டிற்கு அதிகளவில் ஒரு ஆண்டு பயிரான பர்மா, குங்கும ரோஸ், வெள்ளை ரோஸ் ரக மரவள்ளிப் பயிரினை விளைவித்தனர். கிழங்குகள் நல்ல நிலையில் விளைந்து அறுவடைக்குத் தயாரான நிலையில் கன மழையால் வடிகால் வசதியின்றி விவசாய நிலங்களில் மழைநீர் தேங்கியது. இதனால் கிழங்குகள் அனைத்தும் நீரில் அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசியது. எஞ்சிய கிழங்குகளை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் 23ம் தேதி முயல் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,02:01 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 23ம் தேதி முயல் வளர்ப்பு என்ற தலைப்பிலான ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. அந்த பயிற்சியில் முயல் வளர்ப்பின் பயன்கள், முயல் இனங்கள், முயல்களை தேர்தெடுத்தல், இனப்பெருக்க முறைகள், தீவன மேலாண்மை, நோய்களும், நோய் தடுப்பு முறைகளும் மற்றும் இறைச்சி முயல் வளர்ப்பு பொருளாதாரம் குறித்து பயிற்சி அளிக்கப்படும். மேலும், வீடியோ படம் காண்பிக்கப்படும். கால்நடை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள முயல் பண்ணைக்கும் பண்ணையாளர்கள்

அழைத்துச் செல்லப்படுவர். அதில் விவசாயிகள், பண்ணையாளர்கள் உட்பட பலரும் பங்கேற்கலாம். விருப்பமுள்ளோர் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது ஃபோன் மூலமாகவோ 22ம் தேதிக்குள் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**வெங்காய விலையால் பொதுமக்கள் கண்ணீர் : மதுரையில் "பறக்குது' பெல்லாரி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,23:41 IST

மதுரை : மதுரையில் எப்போதும் இல்லாத அளவிற்கு, நேற்று ஒரு கிலோ பெல்லாரி (பெரிய) வெங்காயம் கிலோ 75 ரூபாய்க்கு விற்கப்பட்டது வியாபாரிகள், பொதுமக்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நாட்டு வெங்காயத்தின்
(சிறியது) விலையும் "கண்ணீரை' வரவழைக்கும் வகையில் கிலோ 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. வரத்து குறைவால், இம்மாத இறுதியில் பெல்லாரி விலை கிலோ 100 ரூபாய்க்கு விற்றாலும் ஆச்சரியமில்லை.

வெங்காயம் இல்லாமல் சைவமோ, அசைவமோ எந்த உணவும் கிடையாது. சமீபகாலமாக, உணவு முறை மாற்றங்களால் வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ளது. அதற்கேற்ப உற்பத்தி இல்லாததால், விலை அதிகரித்தது. கோடை காலத்தில் வெங்காயம் பயிரிட்டால், 60 நாட்களில் அறுவடை செய்யலாம். இதுவே பனிக்காலத்தில் 80 நாட்களாகும். மதுரைக்கு உள்ளூரிலும், அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்தும் தினமும் 2500 மூடை (ஒரு மூடை 80 கிலோ) நாட்டு வெங்காயமும், 250 மூடை வீதம் (ஒரு மூடை 50 கிலோ) 20 லாரிகளில் மகராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து பெல்லாரி கொண்டு வரப்படுகிறது. சமீபத்தில் பெய்த தொடர் மழையால், 90 சதவீத வெங்காய செடிகள் அழுகிவிட்டன.

தற்போது பனிக்காலம் என்பதால் வெங்காய உற்பத்தி குறைவாகவே இருக்கும். இதில் மழையும் சேர்ந்துக்கொண்டதால், உற்பத்தி கடுமையாக பாதித்துள்ளது. தேவைக்கு ஏற்ப வரத்து இல்லாததால், வெங்காயத்தின் விலை தினமும் தங்கம் விலை போல் ஏறிக்கொண்டிருக்கிறது. கீழமாரட் வீதி மொத்த கடையில் நேற்று ஒரு கிலோ நாட்டு வெங்காயம் 15 ரூபாய் முதல் 30 ரூபாய்க்குள் விற்கப்பட்டது. இதுவே சில்லரை மார்க்கெட்டில் 40 ரூபாய் வரை விற்கப்பட்டது. வெளிமாநிலங்களில் இருந்து 20 லாரிகளில் பெல்லாரி வெங்காயம் வந்திறங்கிய காலம் மாறி, இன்று 5 லாரிகள் வருவதே கேள்விக்குறியாகி உள்ளது. நேற்று ஒரு கிலோ 75 ரூபாய்க்கு விற்று அனைவரையும் "கண்ணீர்' சிந்த வைத்தது.
இந்நிலை தொடர்ந்தால், வெங்காயம் இல்லாமல் சமையல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் அல்லது குடும்பத்தில் வெங்காயத்திற்கென தனி "பட்ஜெட்' போட வேண்டியிருக்கும்.

தினமும் நடுத்தர குடும்பத்தினரை "கண்ணீர்' சிந்த வைக்கும் வெங்காயத்தின் விலையை நிர்ணயிப்பது யார்? என்பது குறித்து, மதுரை வெங்காய வணிகர் சங்கத் தலைவர் செல்வராஜன் கூறியதாவது : முன்பு ஒரு ஏக்கருக்கு 60 மூடைகள் கிடைத்தன. இன்று 10 மூடைகள்தான் கிடைக்கின்றன. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பகுதியில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. அதிக மழை, அதிக வெயில் வெங்காயத்திற்கு ஆகாது என்பதால்தான், உற்பத்தி, வரத்தை பொறுத்து விலையில் ஏற்றம், இறக்கம் இருக்கிறது. தினமும் அன்றைய வரத்தை பொறுத்தும், வெளி மாவட்டங்களில் உள்ள மார்க்கெட் விலையை கணக்கிட்டும் வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்கின்றனர். மதுரையில் கிலோ 75 ரூபாய்க்கு விற்றது இதுதான் முதன்முறை. தற்போது மழையை பயன்படுத்தி பெரும்பாலான விவசாயிகள் வெங்காயம் பயிரிட்டுள்ளனர். அடுத்த இரு மாதங்களில் அறுவடை நடக்கும் என்பதால், பிப்ரவரி, மார்ச், ஏப்ரலில் விலை குறைய வாய்ப்புள்ளது, என்றார்.

**விவசாய விரிவாக்க மையங்களில் உரங்கள் இருப்பு வைக்க உத்தரவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,23:05 IST

தேனி : மாவட்டம் முழுவதும் மழை நல்ல முறையில் பெய்துள்ளதால் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், உரங்கள், மருந்துகளை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் வழக்கத்தை விட நடப்பு ஆண்டு பலத்த மழை பெய்துள்ளது. இதனால் நேரடி, மறைமுக பாசன நிலங்களிலும், மானாவாரி நிலங்களிலும் விவசாய பணிகள் தொடங்கி உள்ளன. இந்த நிலையில் விவசாயிகளுக்கு அதிகளவு விதைகள், உரங்கள், மருந்துகள் தேவைப்படும். எனவே விவசாயிகளுக்கு எதுவும் தட்டுப்பாடு இன்றி கிடைக்கும் வகையில் தேவையான உரங்கள், விதைகள், மருந்துகளை விவசாய விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க வேண்டும்.
கேட்டு வரும் விவசாயிகளுக்கு அரசு நடைமுறைகளை காரணம் காட்டி தாமதம் ஏற்படுத்தக்கூடாது. தடையின்றி உடனடியாக வழங்க வேண்டும் என கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டுள்ளார்

**நோய் பாதித்த விவசாய நிலங்கள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,23:39 IST

ஆர்.எஸ்.மங்கலம் : திருவாடானை தாலுகா உட்பட்ட திருவாடானை,ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியங்களில் நோயில் தாக்கிய விளைநிலங்களை, மதுரை வேளாண் பல்கலைக்கழக

விஞ்ஞானிகள் ஆய்வுசெய்தனர். திருவாடானை தாலுகாவில் 44 ஆயிரம் எக்டர் பரப்பளவில் நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது.சமீபத்தில் பெய்த தொடர் மழையால் நெர்பயிரில் பூச்சி தாக்குதல் நோய் ஏற்ப்பட்டுள்ளது.நோய் பாதித்த விளைநிலங்களை மதுரை வேளாண் பல்கலைகழக விஞ்ஞானிகள் ஆய்வுசெய்தனர். குழுத்தலைவர் சிவசுப்பிரமணியன் தலைமையில் விஞஞானிகள் சின்னையா,சங்கரலிங்கம்,பாலகிருஷ்ணன் ஆகியோர், நோய் பாதித்த மாதிரி பயிர்களை சேகரித்து, விவசாயிகளிடம் விவரங்களை கேட்டறிந்தனர்.

விஞ்ஞானிகள் கூறும்போது," டீலக்ஸ் பொன்னிரகத்தில் குலைநோய் தாக்குதல் அதிக அளவு தென்படுகிறது.இதை கட்டுப்படுத்த டிரைசைகுளோசால் மருந்து ஏக்கருக்கு 200கிராம் தெளிக்க வேண்டும்.இலைசுருட்டு புழுவை கட்டுபடுத்த ஏக்கருக்கு புரொபனாபாஸ் மருந்து 400மில்லி தெளிக்க வேண்டும்,' என்றனர். ராமநாதபுரம் வேளாண்மை இணை இயக்குனர் சத்தியமூர்த்தி,துணை இயக்குநர் ராஜேந்திரன்,வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் விஜயராகவன்,ஆர்.எஸ்.மங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் முகமது அப்துல் நசீர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் கோரிக்கை பண்ணை சாரா கடனுக்கு தள்ளுபடி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2010,02:00 IST

நாமக்கல்: "பண்ணை சாராக் கடன்களுக்கு முழுவட்டி தள்ளுபடி செய்து, அசல் தொகை மட்டும் 2011ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரை கால அவகாசம் நீட்டித்து அளிக்க வேண்டும்' என, விவசாயிகள் நலச்சங்கத்தின் பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விவசாயிகள் நலச்சங்கத்தின் பிரதிநிதிகளின் ஆலோசனை கூட்டம் நாமக்கல்லில் நடந்தது. மாநிலத்தலைவர் பாலசுப்ரமணியன் தலைமை வகித்தார். பிரதிநிதிகள் சந்திரசேகரன், முருகேசன், செங்கோட்டுவேலு, பூபாலன், லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழக அரசு 2010ம் ஆண்டு அறிவித்த இலவச விவசாய சிறப்பு மின் இணைப்பு திட்டத்தில், விவசாயிகளுக்கு பாதகமான அம்சங்கள் சேர்க்கப்பட்டு, பல்வேறு குளறுபடிகள் நிலவுவதால், அத்திட்டத்தில் உள்ள பிரச்னைகளை களைவதற்கு அந்தந்த மாவட்ட விவசாய சங்க பிரதிநிதிகளுடன் மின்வாரிய சேர்மன் தலைமையில் முழு அமைத்து அனைத்து மாவட்டத்துக்கும் நேரடியாக சென்று கருத்து கேட்டபின் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசு விவசாயிகளுக்கு

வழங்கும் மானியம், இலவச திட்டங்கள் அறிவிப்பதற்கு முன் மாவட்ட விவசாயி சங்க பிரதிநிதிகளுடன் விவசாயத்துறை மாநில செயலாளர் தலைமையில் குழு அமைத்து அதன் சாதக, பாதக அம்சங்களை ஆராய்ந்து அத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

இலவச மின்சாரம் தற்போது வழங்கப்படுவது போல் உணவுப்பயிர், தோட்டக்கலைப்பயிர் என பிரிக்காமல் இலவச மின்சாரம் அனைத்து பயிர்களுக்கும் வழங்க வேண்டும். பண்ணை சாராக் கடன்களுக்கு முழுவட்டி தள்ளுபடி செய்து, அசல் தொகை மட்டும் 2011 டிசம்பர் 31ம் தேதி வரை கால அவகாசம் நீட்டித்து அளிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து வங்கிகளில் விவசாயிகள் பெற்ற விவசாய சம்பந்தப்பட்ட அனைத்து கடன்களும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதால், கரும்பு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு, கரும்பு வெட்டாமலும், அடுத்த மகசூல் செய்ய முடியாமலும் உள்ளன. அரசு உடனடியாக தொழிலாளர்களை அழைத்து பேசி தீர்வு காண வேண்டும. கூட்டுறவு துறை மூலம் நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளி ஆலை அமைக்க வேண்டும். மாவட்டத்தில் வேளாண், மருத்துவம், சட்டம் மற்றும் மூலிகை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியில், பிரதிநிதிகள் வையாபுரி, செல்வராசு, சந்திரமோகன், ராமலிங்கம், நடேசன், தியாகராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.